# பெரம்பலூர் நகராட்சி

**2020ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27.04. 2020 ம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**தலைமை : தனிஅலுவலர் (ம) ஆணையாளர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 27.04.2020 | **பொருள் 01 :** இந்நகராட்சியின் பொது நிதி 2019 - 2020 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 01.04.2020 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண். 302 அனுமதிக்கப்பட்டது |

**2019-2020 பொது நிதி**

| **வ. எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை (இலட்சம்)** | **வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்** |
|---|---|---|---|---|
| 1 | பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையத்தினை சுற்றி உள்ள சாலையில் Patch work செய்யும் பணி | 9.90/- | M/s. SPT & Co ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (-) 0.20 % மதிப்பீட்டிற்கு குறைவு<br>R. ராம்குமார் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.35 % மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s. SPT & Co பெரம்பலூர் மதிப்பீட்டினை |

**அ.கு.**

1. மேற்க்கண்டபணியில்குறைந்தஒப்பந்தப்புள்ளிஅளித்ததிரு.M/s.SPT& Co பெரம்பலூர் அவர்களின் (–) 0.20% குறைந்த மதிப்பீட்டினை ஏற்கலாம்.

2. மேற்க்கண்ட பணி COVID -19- கொரோனா வைரஸ் தடுப்பு பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி 1தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 002133/2020/இ1

| | | |
|---|---|---|
| 27.04.2020 | **பொருள் 02 :** இந்நகராட்சியில் 121 பணியாளர்களை 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பெற்று பொதுசுகாதார பணியினை தனியார் மூலம் பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.407/பி3/2016, நாள்.01.08.2016–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.5113/2015/எச்1, நாள்.26.09.2016-ல் 121 பணியாளர்களை 01.11.2016 முதல் ஓராண்டு காலத்திற்கு M/s. Green Land Engineering Works Limited என்ற நிறுவனத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.917 நாள்.20.09.2016-ல் அனுமதி அளிக்கப்பட்டது. மேற்படி, நிறுவனத்தின் ஒப்பந்தபணி காலம் ஓராண்டு காலம் முடிவுற்ற நிலையில் மேற்படி, நிறுவனத்தின் துப்புரவு பணி திருப்திகரமாக இல்லை என்பதால் இரண்டாம் ஆண்டிற்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.441 நாள். 10.11.2017–ன்படி இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.11002/2017/எச்1, நாள்.31.10.2017– மூலம் 01.11.2017 முதல் 31.10.2018 முடிய ஓராண்டு காலத்திற்கு Our Land Engineering Works Private Limited Chennai என்ற நிறுவனத்திற்கு அனுமதி ஆணை வழங்கப்பட்டது.அதனை தொடர்ந்து நகர்மன்ற தீர்மானம் எண்.127, நாள். 29.10.2018–ன்படி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.11002/2017/எச்1, நாள்.31.10.2018 ன் மூலம் 01.11.2018 முதல் 31.10.2019 முடிய ஓராண்டு காலத்திற்கு மேற்படி, நிறுவனத்திற்கு அனுமதி நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது. மேற்படி 121 பணியார்கனை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்ட 3 ஆண்டு காலம் முடிவுற்ற நிலையில் மேலும் மூன்றாண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்து தரகோரி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.11002/2017/எச்1 நாள்.02.07.2019 ன்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வழியாக நிர்வாக அனுமதிகோரி முன்மொழிவுகள் அனுப்பட்டு ஆணையை எதிர்நோக்கியுள்ள நிலையில் துப்புரவு பணியின் அத்தியாவசியம் கருதி இந்நகர் மன்ற தீர்மான எண்.195 நாள்.29.10.2019–ன்படி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.11002/2017/எச்1, நாள்.31.10.2019–ன் மூலம் மேற்படி 121 பணியார்களை 01.11.2019 முதல் 30.04.2020 முடிய மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து Our Land Engineering Works Private Limited Chennai நிறுவனத்திற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.<br>துப்புரவு ஆய்வாளர்களின் 17.04.2020ம் தேதிய குறிப்பில் மேற்படி நிறுவனத்தின் மூலம் 121 பணியாளர்களை வழங்க அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தபணி காலம் 30.04.2020–வுடன் முடிவடைய உள்ளதால் பொதுமக்களின் நலன் மற்றும் பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டபணியினை தொடர்ந்து திறம்பட செயல்படுத்துவதற்கும் இந்நகராட்சியின் தற்போதைய இடைக்கால கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 60000 ற்கு மேல் உள்ளதாலும் இந்நகராட்சி நாளுக்குநாள்அதிகளவில் முன்னேற்றம் அடைந்து வருவதை தொடர்ந்து மக்கள் வந்து செல்வது அதிக அளவில் உள்ளதால் இந்நகரில் அதிகளவில் குப்பைகள் சேகரமாகுவதாலும் அக்குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என தரம்பிரித்து உரம் தயாரிப்பதற்கு தீவிரபணி நடைபெற்று வருவதால் இப்பணிக்கு தற்போதுள்ள பணியாளர்களை கொண்டு (நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 38 நபர்களும் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 110 பணியாளர்கள்) பணிபுரிய இயலாது எனவும் மேற்படி 121 பணியாளர்களையும் கொண்டே பணிபுரிந்தால் மட்டுமே துப்புரவுபணி முழுமை பெறும் எனவும், மேலும், தற்போது இந்நகராட்சியில் கொரோனோ வைரஸ் - 19 நோய் தொற்று தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பணி மிகவும் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருவதால் பணியாளர்கள் தேவை அவசியமாகிறது எனவும், நிதித்துறை அரசு செயலாளர் சென்னை அவர்களின் கடிதத்தில் கொரோனோ வைரஸ் – தடுப்பு – முன்னெச்சரிக்கை | நகர்மன்றத் தீர்மான எண். 303 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 27.04.2020 | நடவடிக்கைக்கு தேவையான பணிகளை மேற்கொண்டு வருவதால் தற்போது ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998–ன்படி (T T Act-1998) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் செய்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது எனவும் இந்நிலையில் ஒப்பந்தப்புள்ளி கோரி 121 நபர்களை பணியமர்த்தி நடவடிக்கை எடுப்பதற்கு இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் பொதுசுகாதாரம் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி 01.05.2020 முதல் மேலும் 6 மாத காலத்திற்கு மேற்படி 121 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவதற்கும் அவசரம் அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்திற்கு அதே விலை விகிதத்தில் நீட்டிப்பு செய்து இந்நகரின் பொதுசுகாதாரம் பணியினை தங்கு தடையின்றி மேற்கொள்ள துப்புரவு ஆய்வாளர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.<br>அதனைத் தொடர்ந்து, மேற்படி துப்பரவு ஆய்வாளர்களின் அறிக்கையின்படி 121 பணியாளர்களை ஏற்கனவே வழங்கப்பட்ட அதே விலை விகிதத்தில் மேலும், **6** மாதங்களுக்கு வழங்க சம்மதம் இருப்பின் அதனை எழுத்து மூலமாக தெரிவிக்குமாறு ந.க.எண்.11002/2017/எச்1 நாள்.17.04.2020–ன் தேதிய அறிவிப்பின்படி தற்போதைய ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதன் மீது தற்போதைய ஒப்பந்த நிறுவனமான Our Land Engineering Works Private Limited Chennai என்ற நிறுவனம் 20.04.2020–ம் தேதிய தனது கடிதத்தில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட செயல்முறை உத்தரவில் கண்டுள்ள நிபந்தனைகளின்படி அதே விலைவிகிதத்தில் 121 பணியாளர்களை 01.05.2020 முதல் மேலும் 6 மாத காலத்திற்கு வழங்கிட சம்மதம் தெரிவித்துள்ளனர் தற்சமயம் கொரோனோ வைரஸ்-19 தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் வழக்கமான பொது சுகாதார பணிகள் பாதிக்காமல் தங்கு தடையின்றி மேற்கொள்ளுவதற்கும் இப்பணியின் அத்தியாவசியம் கருதி மேலும், 6 மாத காலத்திற்கு 121 பணியாளர்களை Our Land Engineering Works Private Limited Chennai என்ற நிறுவனத்தின் மூலம் பெற்று தங்குதடையின்றி பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>துப்புரவு ஆய்வாளர்களின் அறிக்கையில் இந்நகராட்சியில் வழக்கமான துப்புரவு பணிகள் தங்கு தடையின்றி மேற்கொள்ளவும் தற்போது கொரோனா வைரஸ் தடுப்ப பாதுகாப்பு முன்னெச்சரிக்கை பணியினை மேற்கொள்ளவும் 121 பணியார்களின் பணி தேவை அத்தியாவசியமாக உள்ளது எனவும் அரசின் ஆணை மற்றும் அறிவுரைகளின்படி தற்போது ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை உள்ளதாலும், மேலும் 6 மாத காலத்திற்கு ஏற்கனவே அளிக்கப்பட்ட விலை விகிதம் மற்றும் அதில் காணும் நிபந்தனைகளின்படி தற்போதைய ஒப்பந்ததாரர்கள் மூலம் 121 பணியாளர்களை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள கோரியுள்ளார்கள். எனவே பொது சுகாதார பணி மற்றும் கொரோனா வைரஸ் -19 தடுப்பு பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பணியின் அவசர அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டும் தற்போதைய சூழலில் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்க இயலாத நிலை உள்ளதாலும், பொதுசுகாதாரத்தில் பணிகள் எவ்வித தங்குதடையின்றி நடைபெறும் வகையில் மேற்படி துப்புரவு ஆய்வாளர்களின் குறிப்பின்படியும் சம்மந்தப்பட்ட நிறுவனம் ஏற்கனவே கொடுத்துள்ள விலைவிகிதம் மற்றும் அதில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 121 பணியார்களை வழங்கிட சம்மதம் தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும் ஒப்பந்த அடிப்படையில் ஏற்கனவே வழங்கி வரும் விலை விகிதத்திற்குட்பட்டும் அவ்வுத்தரவில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் 01.05.2020 முதல் 6 மாத காலத்திற்கு பணியாளர்களை வழங்கிட Our Land Engineering Works Private Limited Chennai என்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கலாம். ஆ) பொதுசுகாதார துப்புரவு பணிக்காக 6 மாத காலத்திற்கு பணியாளர்களை வழங்குவதற்கு தேவையான உத்தேச செலவினத்தொகை ரூ.100.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.11002/2017/எச்1,** | |

| | | |
|---|---|---|
| 27.04.2020 | **பொருள் 03 :** இந்நகராட்சி பொறியாளர் பிரிவில் இயங்கி வரும் கீழ்குறிப்பிட்ட வாகனங்களுக்கு 2020 - 2021 ஆம் ஆண்டில் காப்பீடு புதுப்பித்தல் கட்டணம் , பசுமை வரி , சாலை வரி மற்றும் இதர செலவினங்கள் ஆகியவற்றை வருவாய் நிதியிலிருந்து செலுத்திடவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.7,00,000/- த்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண். 304 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 1 | TN 46 K – 0021 | குடிநீர் வாகனம் ( லாரி) |
| 2 | TN 46 P - 2754 | தூர்வாரும் வாகனம் ( ஆட்டோ) |
| 3 | TN 46 J - 7972 | குடிநீர் வாகனம் ( லாரி) |
| 4 | TN 46 P - 8533 | தெரு விளக்கு வாகனம் ( லாரி) |
| 5 | TN 46 - 7617 | ஆணையாளர் ஈப்பு வாகனம் |
| 6 | TN 46 T - 3929 | புதிய ஈப்பு வாகனம் |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 008675/2017/இ1

| | | |
|---|---|---|
| 27.04.2020 | **பொருள் 04 : 5** இந்நகராட்சியில் கொரோனோ வைரஸ் தடுப்பு பணிகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் நகரின் அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (அரசாணை எண்.97, தமிழ்நாடு அரசு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை) நாள்.15.03.2020–ன் அறிவுரையின்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் நக.எண்.5437/ஜே1/2020 நாள்.09.03.2020 மற்றும் மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அவ்வப்போதைய ஆய்வுக்கூட்டம் மற்றும் நேரடி அறிவுரைகளின்படியும் பெரம்பலூர் நகர் முழுவதும் கொரோனோ வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை மற்றம் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான அவசர மற்றும் அத்தியாவசிய பொதுசுகாதார உபகரணங்கள், கிருமிநாசினிகள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் வாங்கி பயன்படுத்த தெரிவித்துள்ளார்கள்.<br>தற்சமயம், கொரோனோ வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக நாடு முழுவதும் அனைத்து மாநிலங்களிலும் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் பொதுசுகாதார உபயோகத்திற்கு தேவையான கிருமிநாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவதற்கான அவசர அத்தியாவசியம் ஏற்பட்டுள்ளதால் அரசு செயலாளர் நிதித்துறை (ஊதியம்) சென்னை அவர்களின் கடிதம் எண்.74/JS(M.A)2020, நாள்.01.04.2020-ல் கொரோனோ வைரஸ் 2019 – தடுப்பு – முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு தேவையான கீழ்கண்டுள்ள பொருட்களை வாங்குவது மற்றும் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக ஒழிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998–ன்படி (T T Act-1998) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் செய்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3336/J2/2020-13, நாள்.09.04.2020-லும் மேற்படி, அரசு செயலாளர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளை பின்பற்றி கிருமிநாசினிகள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் வாங்குவதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.<br>a. Personal Productive Equipment<br>b. Disinfecting equipment.<br>c. Disinfectants<br>d. Maintenance of relief centre's<br>e. Procurement of groceries and other provisions for feeding the inmates of the relief centre's<br>f. Urgent civil and electrical works to create health infrastructure and Purchase of hospital equipment, furniture, drugs and consumables for treatment, isolation and quarantine of COVID-19 patients,<br>g. Procurement of essential commodities by Tamil Nadu Civil Supplies Corporation.<br>மேற்படி, அரசு செயலாளர் அவர்களின் கடிதம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண்.2160/2020/எச்1** | நகர்மன்றத் தீர்மான எண். 305 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 27.04.2020 | **பொருள் 05 :** அரசாணை (நிலை) எண்.118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந–2)துறை, நாள்.26.09.2014–ன்படி இந்நகராட்சியில் இரண்டு அம்மா உணவகங்கள் செயல்படுவதற்கு அனுமதிக்கப்பட்டு 24.05.2015 முதல் அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகிறது. இந்த அம்மா உணவகங்களில் ஆதரவற்றோர், ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் காலை மற்றும் மதியம் ஆகிய இருவேலைகளில் உணவு தயாரித்து விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி, உணவு தயாரிப்பதற்கு தேவையான அரிசி, மளிகைப்பொருட்கள், பால், காய்கறிகள், எரிவாயு சிலிண்டர் மற்றும் பராமரிப்புக்கு தேவையான தளவாடச்சாமன்கள் வாங்கி பயன்படுத்தப்படுகிறது. அம்மா உணவகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாத ஊதியம் இந்நகராட்சியால் குழுவிற்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி இரண்டு அம்மா உணவகத்திற்கு 01.04.2020 முதல் 31.03.2021 முடிய (2020-2021–ம் ஆண்டிற்கு) முடிய ஓராண்டு காலத்திற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.75.00 இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>__அலுவலக குறிப்பு:__<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.16393/2015/எச்1** | நகர்மன்றத் தீர்மான எண். 306 அனுமதிக்கப்பட்டது |
| 27.04.2020 | **பொருள் 06 :** பெரம்பலூர் நகராட்சி ஆணையர் அவர்களது மார்ச் 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்த் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் பதிவு செய்யலாம். | நகர்மன்றத் தீர்மான எண். 307 அனுமதிக்கப்பட்டது |
| 27.04.2020 | **பொருள் 07 :** பெரம்பலூர் நகராட்சி ஆணையர் அவர்களது ஏப்ரல் 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்த் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் பதிவு செய்யலாம். | நகர்மன்றத் தீர்மான எண். 308 அனுமதிக்கப்பட்டது |
| 27.04.2020 | **பொருள் 08 :** பெரம்பலூர் நகராட்சி பொறியாளர் அவர்களது ஏப்ரல் 2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்த் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் பதிவு செய்யலாம். | நகர்மன்றத் தீர்மான எண். 309 அனுமதிக்கப்பட்டது |

// ஒம் // திரு . S. குமரி மன்னன்
தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
பெரம்பலூர் நகராட்சி